13 இதழ் 125

REGD NO M 7397. NAVAMANI (Tamil Daily) MADRAS. Phone No. 76190—76199

4 பக்கம் 15 காசு விமானப் பதிப்பு 18 காசு

பங்களாவுக்கு குடி போக மறுத்த மந்திரி ! —3-ம் பக்கம்

நவமணி

கூட்டுறவு முறையில தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 14—2—73 புதன் வெளியூர் 15—2—73 வியாழன்

தமிழ்நாட்டுக்கு உடனடியாக நிலக்கரி அனுப்ப ஏற்பாடு

கருணாநிதி கோரிக்கைக்கு மத்திய அரசு பதில்: மந்திரி மோகன் தந்தி

சென்னை, பிப். 14—தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றுக் குறையைச் சமாளிக்க, அனல்மின்சார நிலையங்களுக்கான நிலக்கரித் தேவையை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்துள்ளதாக மத்திய உருக்கு சுரங்க மந்திரி மோகன் குமாரமங்கலம் தந்தி மூலம் முதலமைச்சர் கருணாநிதிக்கு தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள பேசின் பிரிட்ஜ், எண்ணூர் அனல் மின்சார நிலையங்களில் நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் உடனடியாக நிலக்கரி அனுப்பி வைக்க ஆவன செய்யுமாறு தமிழக முதலமைச்சர் கருணாநிதி மத்திய மந்திரி மோகனுக்கு இம்மாதம் 10-ந்தேதி தந்தி அனுப்பியிருந்தார். அதற்கு மோகன் குமாரமங்கலம் இன்று பதில் அனுப்பியுள்ளார்

தமிழ்நாட்டில் ஏற்கனவே மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டு 40 சதவிகித மின்சார வெட்டு அமுலில் இருந்து வரும் நிலையில் ஆந்திராவில் கிளர்ச்சி நடைபெறுவதன் விளைவாக, நிலக்கரி வரத்து தடைப்பட்டு, இங்குள்ள அனல மின்சார நிலையங்களில் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனைச் சுட்டிக்காட்டி தமிழக முதலமைச்சர் கருணாநிதி மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலத்துக்கு பிப். 10-ந் தேதி அவசரத் தந்தி கொடுத்திருந்தார். அதில் அவர், தமிழ் நாட்டுக்கு மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரம் டன் நிலக்கரி தேவை என்றும், சிங்கரேணியிலிருந்து 96,000 டன்னும் பெங்கால் பீகாரிலிருந்து 16000 டன்னும் ஒதுக்கப்பட்டது என்றும்; ஆனால் முப்பத்தையாயிரம் டன்னுக்கு மேல் சிங்கரேணி சுரங்கத்தால் சப்ளை செய்ய முடியவில்லை என்றும்; சப்ளை குறைக்கப் பட்டதாலும் ஆந்திராவில் கிளர்ச்சியின் காரணமாக ரயில் போக்குவரத்து தடைப்பட்டதாலும நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தில் 3000 டன் மட்டுமே நிலக்கரி இருப்பு உள்ளது என்றும் உடனடியாக நிலக்கரி அனுப்ப வேண்டும் என்றும் கருணாநிதி தனது தந்தியில் வற்புறுத்தியிருந்தார்.

கப்பல் மூலம் நிலக்கரி வருகிறது

அதற்குப் பதில தெரிவித்து மத்திய அமைச்சர் மோகன இன்று அனுப்பியுள்ள தந்தியில் உடனடியாக இருபதாயிரம் டன் நிலக்கரி பெங்கால் பீகார் சுரங்கத்திலிருந்து கப்பல் மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த நிலக்கரியை உடனடியாக அனுப்பிவைக்க எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில்

சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்பட்டன

விஜயவாடா, பிப். 14—ஆந்திராவில் மின்சாரம் பற்றுக்குறையை தொடர்ந்து மாநிலத்தில் உள்ள 6 சிமெண்டு தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இதனல் ஏற்படும் தினசரி உற்பத்தி நஷ்டம் சுமார் 6 ஆயிரம் டன். சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள்.

தினசரி சிமெண்டு உற்பத்தி நஷ்டத்தின் மதிப்பு சுமார் 13 லட்சம் ரூபாய்.

பாகிஸ்தானில் பெண் கவர்னர் நியமனம்

ராவல்பிண்டி, பிப். 14—திருமதி லியாகத் அலிகான் நாளை சிந்து மாநிலத்தின் புதிய கவர்னராகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொள்வார்.

இவர் காலஞ்சென்ற பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானின் மனைவியாவார்.

சிந்துவின் கவர்னராக இருந்த மிர்ரசூல் பேக் திடீரென தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். ஆகவே அந்தப் பதவிக்கு திருமதி லியாகத் அலிகான் நியமிக்கப்பட்டார்.

திருமதி லியாகத் அலிகான் நெதர்லாந்து, இத்தாலி, டுனீசியா ஆகிய நாடுகளில் பாகிஸ்தானின் தூதராக பணியாற்றி வந்தவர்.

ஆஸ்பத்திரியில் 3 மாணவர்கள்

சோதனைக் கூடத்தில் விபத்து

சென்னை, பிப். 14—சென்னை சவுகார்பேட்டையில் படித்து வரும் 3 மாணவர்கள் தங்கள் பள்ளி சோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்து கொண்டிருந்தபோது குளோரின் வாயு தற்செயலாக வெளிப்பட்டதன் காரணமாக நினைவிழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மனோகரன் புஷ்ப் சந்த் கோவர்த்தன் அகர்வால் ஆகிய அந்தமூறுறு மாணவர்களும் 16 வயதானவர்கள். 10-வது படிப்பவர்கள். சோதனையின் போது குளோரின் வாயு அடங்கிய தொட்டியில் ஒழுக்கு ஏற்பட்டு வாயு வெளிப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புதிய தொழில் துவங்குவோர் சங்கம்

சென்னை, பிப். 14—தேசிய புதிய தொழில் துவங்குவோர் சங்கத்தின் தமிழ் நாடு கிளை பொதுக் குழுக் கூட்டம் 12-2-73 மாலை முன்னாள் மேயர் கமலக்கண்ணன் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வி. ஏ. குரியன் தலைவராகவும், ஜி பி மூர்த்தி ரகுபதிராவ் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், என். முத்துக்குமாரசாமி பொதுச செயலாளராகவும், பி. ஆர். பஞ்சாட்சரம், ஆர். ராமமூர்த்தி ஆகியோர் துணைச் செயலாளராகவும் கே. கமலக்கண்ணன் பொருளாளராகவும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய தொழில் துவங்குவதற்குரிய தொழில் நுணுக்கக் குழு ஒன்றும அமைக்கப்பட்டது. புதிய தொழில்கள் சம்பந்தமான கருத்தரங்குகள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

கைக்கடிகாரம் யாருடையது?

சென்னை, பிப். 14—சென்னை ராட்டன் பஜார் பிளாட்பாரத்தில் (பூக்கடை போலீஸ் நிலையம் அருகில்) ஒரு லேடீஸ் வாட்ச் செயினுடன் கீழே கிடந்தது. அந்த கடிகாரம பூக்கடை போலீஸ் நிலயத்தில் உள்ளது அதற்குரியவர்கள் பூக்கடை போலீஸ் நிலையத்தில் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சமூகப் பணி

சென்னை, பிப். 14—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமத்திலுள்ள சேத்துப்பட்டு சாலையைச் சீரமைக்கும் பணியில் சென்னை புதுக் கல்லூரி சமூகப் பணி மன்றத்தைச் சேர்ந்த மாணவர்கள் பேராசிரியர் முஸ்தபா தலைமையில் ஈடுபட்டனர். சேதமடைந்த பகுதியைச் சீர் செய்ததுடன் கிராம மக்களின் சமூக, பொருளாதார நிலையையும் கணக்கெடுத்தனர். நகர்ப்புறங்களைச் சுத்தம் செய்தல். நடமாடும் மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்கு உதவிபுரிதல் போன்ற பணிகளையும செய்தனர்.

சமூகப்பணி மன்றத்தின் முடிவு விழா குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்து பரிசுகள வழங்கினர். சமூகப் பணி மன்றச் செயலாளர் எஸ். கோபாலக்கிருஷ்ணன் அறிக்கை வாசிக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சௌந்திர பாண்டியன், கைத்தொழில் விஸ்தரிப்பு அலுவலர், கிராம கல்வி அலுவலர் ஆண்டி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாணவர் இரா. சுந்தரராமன் நன்றி கூற விழா முடிந்தது.

இந்திய-சோவியத் கூட்டுக் கமிஷன், சோவியத் வெளிநாட்டுப் பொருளாதார உறவுக்குழு ஆகியவற்றின் தலைவரான எஸ். ஏ. ஸ்காச்கோவ் பிரதமர் இந்திராவைச் சந்தித்த போது எடுத்தபடம்.

ராகவானந்தம் அ. தி. மு. க. வில் சேர்ந்தார்

சென்னை, பிப். 14—தி. மு. கழக மேலவை உறுப்பினராக இருந்து—பிறகு இந்திரா காங்கிரசில் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர் எஸ். ராகவானந்தம் இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்.

எம். ஜி ஆர். முன்னிலையில் அவர் அண்ணா தி. மு கழகத்தில் சேர்ந்ததாக அறிவிக்கப் பட்டது

அண்ணா தி. மு. க.வில் தொழிற்சங்கப் பிரிவில் துணை அமைப்பாளராக ராகவானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரெயிலிலிருந்து விழுந்து மாணவர் மரணம்

சென்னை, பிப். 14—சென்னை கல்லூரி மாணவர் ஒருவர் வீடு திரும்புகையில் ரெயிலிலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்து இறந்தார்.

ரமேஷ் எனப்படும் ராதா கிருஷ்ணன் என்னும் அந்த மாணவரின் வயது 20. அவர் புதுக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்.

அவர் அம்பத்தூரைச் சேர்ந்தவர். நேற்று கல்லூரி முடிந்து அவர் திருப்பதி பாசஞ்சர் ரெயில் வண்டி மூலம் அம்பத்தூர் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் படிக்கட்டில நின்றபடி பிரயாணம் செய்ததாகக் கூறப்படுகிறது. தண்டவாளத்தின் ஓரத்தில் இருந்த சிக்னல் கம்பத்தின் மீது மோதி அவர் கீழே விழுந்து படுகாயமடைந்தார். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படும் வழியில் அவர் உயிரிழந்தார். உடல் ஆஸ்பத்திரி சவக் கிடங்கிற்கு அனுப்பப்பட்டது.

சினிமா செய்திகள் —4-ம் பக்கம்

அடுத்த வாரம் பார்லிமெண்ட் கூட்டம் ஆரம்பம்

புதுடெல்லி, பிப். 14—பார்லிமெண்ட் கூட்டத் தொடர் வருகிற திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. ரெயில்வே பட்ஜெட் 20-ந் தேதியும், மத்திய அரசின் பொது பட்ஜெட் 28-ந் தேதியும் தாக்கல் செய்யப்படும்.

திங்கட்கிழமை மக்கள் சபை ராஜ்யசபை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் நடைபெறும். ஜனாதிபதி கிரி கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்துவார்.

மத்திய மந்திரிசபை நேற்று கூடி ஜனாதிபதியின் உரையை இறுதியாக்கியது. சுமார் முக்கால் மணிநேரம் நடந்த இக்கூட்டத்தில் தனி இலாகா பொறுப்புள்ள மந்திரிகளும் கலந்து கொண்டனர்.

ஆந்திரா பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குத் தகுந்த சூழ்நிலையை உண்டாக்க வன்முறையைக் கைவிடுமாறு ஜனாதிபதி தனது உரையில் தனி ஆந்திர மாநில கிளர்ச்சி தலைவர்களுக்கு மற்றும் ஒரு வேண்டுகோள் விடுப்பார் என்று தெரிகிறது.

ஜனாதிபதியின் உரை, நாட்டின் பொருளாதார நிலைமையை விவரமாக எடுத்துக் கூறி, நிலைமையைச் சமாளிக்க அரசு கொண்டுள்ள உறுதியை எடுத்துக் கூறும் என்று தெரிகிறது.

பார்லிமெண்டின் பட்ஜெட் கூட்டத் தொடரில் மத்திய அரசு கொண்டு வர இருக்கும் புதிய மசோதாக்கள் பற்றிய தகவல்களும் ஜனாதிபதி உரையில் அடங்கியிருக்கும்.

ஜனாதிபதி தனது உரையில் சர்வதேச நிலைமை பற்றியும் குறிப்பிடுவார்.

பட்ஜெட்

ஜனாதிபதி உரைமீது மக்கள் சபையில் 21, 22, 23, 26 ஆகிய நான்கு தேதிகளில் விவாதம் நடைபெறும்.

ரெயில்வே பட்ஜெட் வருகிற 20-ந் தேதி தாக்கல் செய்யப்படும்; மத்திய அரசின் பட்ஜெட் 28-ந் தேதி தாக்கலாகும்.

பட்ஜெட்டில் ரூ. 150 கோடிக்குப் புதிய வரிகள் விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வருகிற பார்லிமெண்ட் கூட்டத் தொடரின் போது எதிர்க்கட்சியினர் ஆந்திரா நிலைமை, விலைவாசி உயர்வு, நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி நிலைமை, மத்திய சம்பளக் கமிஷன் அறிக்கை தாக்கலாவதில் ஏற்பட்ட தாமதம் உட்பட பல பிரச்னைகளை எழுப்ப எதிர்க் கட்சிகள் திட்டமிட்டுள்ளனர்.

திண்டுக்கல் தேர்தல்

மாயத்தேவர் அறிவிப்பு

சென்னை, பிப். 14—திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியில் அண்ணா திமுக சார்பில் போட்டியிட விருப்புவதாக வழக்கறிஞர் மாயத்தேவர் அறிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நான் திண்டுக்கல் பாராளுமன்ற இடைத் தேர்தலில் அண்ணா தி. மு. க சார்பாக போட்டியிட நான் விருப்பப் படவில்லை என்று யாரோ சிலர் தப்புப் பிரச்சாரம் செய்வதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனது தலைவர் எம். ஜி. ஆரும் கழகமும் என்னை தேர்தலில் போட்டியிடச் சொல்லி ஆணையிட்டால் நான் கட்சிக் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு தேர்தலில் போட்டியிடத் தயாராக இருக்கிறேன் என்பதை இதன் மூலம் அனைவருக்கும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாயத்தேவர் விக்கிறார்.

சுறாமீன் அபாயம்

கடலில் குளிப்பவருக்கு எச்சரிக்கை

சென்னை, பிப். 14—சென்னை கடலில் சுறாமீன் அபாயம் இருப்பதால், கடலில் குளிக்கச் செல்வோர் ஆழமான பகுதிக்குச் செல்லாமல் இருக்கும்படி மாநகராட்சி சுகாதார அதிகாரி எச்சரிக்கை செய்துள்ளார்.

வருகிற பிப். 17-ந்தேதி மாசி மகத்தை முன்னிட்டு, கடலில் குளிக்கச் செல்லும் பொது மக்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் முதலுதவி செய்வதற்காக மாநகராட்சி முதலுதவி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறது. திருவல்லிக்கேணி கடற்கரை, ஐ. ஜி. ஆபீஸ் எதிரிலுள்ள கடற்கரை, சாந்தோம் துப்பாக்கி சுடும் இடம் ஆகிய இடங்களில் இந்த முதலுதவி நிலையங்கள் இயங்கும். இவ்வாறு மாநகராட்சி சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார்.

மறியலுக்கு வந்த படேல் மகளிடம் முதல்வர் காட்டிய மரியாதை

ஆமதாபாத், பிப். 14—மறியல் போராட்டம் நடத்துவதற்காக வந்த சர்தார் படேலின் புதல்வி மணிபென் அம்மையாரிடம் குஜராத் முதலமைச்சர் ஓசா விசேஷ மரியாதை காட்டினர்.

நியாய விலை கடைகள் மூலம் போதிய உணவு தானியங்களைச் சப்ளை செய்யும்படி வற்புறுத்துவதற்காக ஆமதாபாத் நகரில் குஜராத் சட்டசபை எதிரே தடை உத்திரவை மீறி மறியல் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

போராட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே மணிபென் படேல, சட்டசபை பகுதிக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

உடனே அவரை முதலமைச்சர் ஓசா சந்தித்து வெயிலில் நிற்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஆனல் மணிபென் படேல் மற்ற போராட்டத் தொண்டர்கள் வரும்வரை அங்கேயே காத்திருக்க தீர்மானித்தரர்.

பின்னர் முதலமைச்சரின் உத்தரவுப்படி மணிபென் படேல் கைது செய்யப்பட்டு, ஒரு காரில் அரசு விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் அதே காரில் அவருடன் முதலமைச்சரும் சென்றார்.

சிறிது நேரம் கழித்து போராட்டத் தொண்டர்கள் 80 பேர் சட்டசபை பகுதிக்கு வந்தபோது அவர்களும் கைது செய்யப்பட்டு அரசு விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நவமணி

14—2—73 புதன்கிழமை (15—2—73)

அகில இந்திய எதிர்க்கட்சிகள்

ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இன்று வலுவுள்ள எதிர்க்கட்சி எதுவும் இல்லை.

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் எவ்வாறு காங்கிரஸ் கட்சி திரு நேரு தலைமையில் வலுவுடன் விளங்கியதோ அவ்வாறே இப்பொழுதும் இந்திரா தலைமையிலான காங்கிரஸ் கட்சி வலுவுடன் இருக்கிறது. எதிர்க் கட்சிகளை எடுத்துக் கொண்டால் பொதுவுடமைக் கட்சியில் பிளவு ஏற்பட்டு அது பலவீனமடைந்து விட்டது. சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஜனசங்கமும் வலுவை இழந்து விட்டது.

ஸ்தாபன காங்கிரஸ், மீண்டும் பழைய இடத்தை பிடிக்க இயலாத நிலையில் இருக்கிறது.

அவ்வாறே சுதந்திரா, சோஷலிஸ்டு கட்சி, பார்வேர்ட் பிளாக் கட்சி போன்றவைகளும் அகில இந்தியாவில் வலுவற்றிருப்பதைக் காண்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் திரு பட்நாயக் எதிர்க்கட்சிகளை யெல்லாம் ஒரே அணியில் இணைக்கும் முயற்சியில ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளார்.

அவர் எடுத்துள்ள முயற்சியை அரசியல்வாதிகள் அனுகூலத்துடன் அணுகலாம். ஆனால் திரு பட்நாயக் தமது உத்கல் காங்கிரஸ் கட்சியை அவருடைய மாநிலத்தில் மட்டுமே தோற்றுவித்தார். தி. மு. க. வைப் போன்று அதுவும் ஒரு மாநிலக் கட்சியே. வளர்ந்த விதம், அதன் தலைமை, அதன் அடிப்படைத் தத்துவம் இவற்றின் மீது மக்களுக்கு உள்ள பிடிப்பு திரு பட்நாயக் ஆரம்பித்த உட்கல் காங்கிரசுக்கு உண்டா என்பது ஆராய்ச்சிக்குரியது.

இப்பொழுது அவர் மேற்கொண்டுள்ள முயற்சி அகில இந்திய அடிப்படையில் ஆளுங் காங்கிரசுக்கு எதிராக இருக்கின்ற கட்சிகளையெல்லாம் இணைத்து, அதன்மூலம் நாடாளுமன்றத்தில் ஒரு வலுவான எதிர்ப்பை உருவாக்க முடியுமா என்பதே. திரு. காமராஜ், திரு. கருணாநிதி போன்ற தலைவர்களைச் சந்திக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

ஆனால் அவருடைய முயற்சிக்கு திரு. ஜெயப்பிரகாச நாராயணன் கூறிய பதில் அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். அகில இந்தியாவில் ஆளுங் கட்சியை மாற்றிப் பதவியை ஏற்கக்கூடிய எதிர்க்கட்சி தேவைதான் என்று அவர் கூறும்பொழுதே அதற்கு அடிப்படை இந்திரா மீதோ அல்லது அவர் கட்சி மீதோ கொண்டுள்ள வெறுப்பு ஒரு காரணமாக இருக்கத் தேவையில்லை என்கிறார். அதேசமயம் நல்ல ஜனநாயகத்திற்கு வலுவுள்ள எதிர்க்கட்சி இன்றியமையாதது என்பதையும் ஒப்புக் கொள்கிறார் ஜெயப்பிரகாஷ்.

அத்தகைய எதிர்க்கட்சி உரிய கொள்கை அடிப்படையில் திறமையான தலைமையின் கீழ் உருவாக வேண்டும்.

இதே கருத்துடன்தான் நாடு விடுதலை பெற்ற பின்னர் திரு காந்தியடிகள் அவர்களும் காங்கிரசைக் கலைத்து விடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்பதும் நினைவு கூரத் தக்கது.

பல குறிக்கோள்களைக் கொண்ட கட்சிகள் பல திறப்பட்ட தலைவர்களைக் கொண்ட கட்சிகள் ஒன்று சேருவது வெகு நாளைக்கு நீடிக்காது.

ஆதலின் அகில இந்தியாவிலும் நல்ல கொள்கை அடிப்படையில் ஒரு புதிய கட்சி உருவாக வேண்டுமே அல்லாது கூட்டணிகள் வெற்றியை தரமாட்டா என்பதை முன்னரே மக்கள் உணர்ந்து விட்டனர்.

பஸ் தேசியமய மசோதா நிறைவேற்றம்: எதிர்க் கட்சியினர் வரவேற்பு

சென்னை, பிப். 14—தமிழ்நாட்டில் எல்லா பஸ்களையும் 5 ஆண்டுகளில் தேசிய மயமாக்கும் மசோதா நேற்று சட்டசபையில் நிறைவேறியது. இந்த மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மசோதாவை ஆதரித்தனர். அவர்கள் பேசியதாவது:—

லத்தீப் (மு. லீ.): சமுதாயத்தில் ஒரு அங்கமான பஸ் முதலாளிகளின் மீது எந்தவித கருணையும் காட்டக் கூடாது என்று ராஜா குறிப்பிட்டார். அடிப்படையான பொருளாதாரம் பாதிக்கப் படாதவாறு செய்வதுதான் சோஷலிசம். பாதிக்கப்படவேண்டியவர்கள் கருணை தேவைப் படுவதால் தான் அதை கேட்கிறார்கள். சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒரு பஸ்சை வைத்திருப்பவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் பேச வேண்டும். ஒரு பஸ்சுக்கு 20 ஆயிரம் ரூபாய் லாபமடைகிறார் என்று கூறப்படுகிறது.

ராமச்சந்திரன்: 20 ஆயிரம் ரூபாய் என்பது வருமான வரி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ள தோராய மதிப்பு.

லத்தீப்: செலவு என்ன என்பதை கவனிக்க வேண்டும் உதவி பாகங்கள், டயர் முதலியவை விலை அதிகம் 90 சதவிகிதம் பேர் வட்டிக்காரர்களிடம் கடன் வாங்கிதான் நடத்துகிறார்கள்.

இப்படி வருடா வருடம் வரி, சர்சார்ஜ், முதலியவை போக அவருக்கு ஆதாயம் ஒன்றும் இல்லை.

இந்த சட்டத்தில் பல அம்சங்கள் நுணுக்கமாக ஆராயப் படவேண்டியுள்ளது. இத்தகைய திட்டங்கள் நன்கு ஆராய்ந்து கொண்டுவரப்பட வேண்டும்.

கூட்டு ஆய்வுக் குழுவிற்கு விடப்படவேண்டும் என்று கோரினார்.

பரந்தாமன் (தி மு க):— மராட்டிய மாநிலத்தில் 90 சதவிகிதம்தான் தேசியமயமாக்கி இருக்கிறார்கள். தமிழக அரசுதான் நூறு சதவிகிதம் தேசியமயமாக்கியிருக்கிறது. தனியார் பஸ்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் கூட பணியாற்றுகிறார்கள் பஸ்களை தேசிய மயமாக்கும் போது, அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

மணலி கந்தசாமி (வ. கம்யூ):— இந்த சட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் மாவட்ட வாரியாக எடுத்துக் கொள்வது, 5 வருடத்திற்குள் எடுத்துக் கொள்வது என்பது சில தவறுகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

பஸ் எண்ணிக்கை அடிப்படையாக (10, 7, 5, 3, 2, 1 என்று) எடுத்தால் நல்லது.

லாரிகளையும் தேசியமயமாக்கவேண்டும் என்று கூட சட்டம் போட்டிருக்கலாம். அதைவிட போக்குவரத்தையே அரசு ஏற்கும் என்றால் கூட நன்றாக இருக்கும்.

கந்தசாமி (பார்வர்டு பிளாக்):— வரவேற்கிறேன். இந்திரா கட்சி ஆளும் மாநிலங்களில் கூட இந்த சட்டம் இயற்றப்படவில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதை நான் பாராட்டுகிறேன். சினிமா தொழிலையும் தேசிய மயமாக்க வேண்டும். லாரிகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று கூறினார்.

ஜேப்ஸ் (ப. காங்.): இந்த திட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்த திட்டத்தை காங்கிரஸ்தான் அறிமுகப் படுத்தியது. இந்த அரசு தேசியமயத்தை தீவிரப் படுத்துகிறது.

இந்த சட்டத்தால் 6 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப் படுவார்கள். அவர்களுக்கு அரசு உதவ சட்டம் குறுக்கிடும். அதற்கு வழி செய்யப்படவேண்டும்.

நஷ்டஈடு ஒரு ஆண்டு கழித்துதான் என்று இருக்கிறது. ஒரு பஸ்சை வைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றார்.

அனந்தநாயகி (இ. காங்கிரஸ்): பணக்காரர்கள் வைத்திருக்கும் தொழிற்சாலைகளை விட்டுவிட்டு, பஸ்களை பிடித்தது ஏனோ? இதற்கு நாங்கள் எதிர்ப்பாக இல்லை. ஆனால் அவசரச் சட்டம் போட்டு 5 ஆண்டில் நிறைவேற்ற உள்நோக்கம் என்ன?

மக்களை ஏமாற்றுவதற்காக இந்த சட்டம். இதில் அவசர பொங்கல் பரிசு நீலகிரி மாவட்டக்காரனுக்கு.

உட்கிடக்கை எண்ணம் இருக்கிறது இந்த சட்டத்தில் ஒரு பஸ். 2 பஸ் வைத்திருப்பவர்களுக்கு 10 ஆயிரத்துக்கு மேல் ரொக்கம் கிடையாது என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் டி. வி. எஸ் சுக்கு 125 லட்சம் நஷ்டஈடு. ஏ. பி. டிக்கு 67 லட்சம் நஷ்டஈடு. இது என்ன சமதர்ம சமுதாயம்? சமதர்ம அரசு? அவர்களுக்கு கொடுத்த நஷ்டஈட்டையே எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

சுப்பு (வ. கம்யூ): இந்த சட்டத்தை வார்த்தைக்கு வார்த்தை வரவேற்கிறேன். நிர்ப்பந்தங்களுக்கு இடையே கொண்டு வரப்பட்டுள்ளது. வேறு நிர்ப்பந்தங்களுக்கு ஊழல்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை அமைச்சர் அறிவிக்க வேண்டும்.

இதை உடனடியாக சட்டமியற்ற வேண்டும். இதற்காக இந்த அரசை பாராட்டுகிறேன் என்றார்.

சென்னை மார்க்கெட்

சென்னை, பிப். 14—

தங்கம்	
24 காரட்) சுத்த தங்கம் 10 கிராம்	ரூ. 267 00
(22 காரட்) சில்லரை 1 கிராம்	ரூ. 26 00
(14 காரட்) சில்லரை 1 கிராம்	ரூ. 16 75
வெள்ளி	
பார் வெள்ளி (1 கி. கி.)	ரூ. 622 00
உள்ளூர் வெள்ளி	ரூ. 610 00
வெள்ளி 10 கிராம்)	ரூ. 6 30
மணிலாப்பயறு	
மாரிகால பட்டாணி 80 கி. கி.	ரூ. 267 00
மணிலா எண்ணெய்	
மொத்த விலை	ரூ. 610 00
சில்லரை விலை	ரூ. 6 50
விளக்கெண்ணெய்	
(100 கி. கி.) சென்னை கிடங்கு டெலிவரி திருப்பத்தூர் மொத்த விலை	ரூ. 540 00
சில்லரை விலை	ரூ. 555 00
சேலம் தாமரை அன்னப மார்க் (16 05 கி. கி)	ரூ. 90 00
தேங்காய் எண்ணெய்	
எம். ஆர். எஸ். மார்க்	ரூ. 114 00
	ரூ. முதல் 118 00
நல்லெண்ணெய்	
17 கி. கொண்ட டின் 1-க்கு (அக்மார்க் குருபரன் மார்க்)	ரூ. 122 00
விற்பனை வரி தனி	
சில்லரை (கிலோ 1-க்கு)	ரூ. 7 75
கடலைப்பிண்ணாக்கு	
70 கி. கி. கொண்ட மூட்டைக்கு எக்ஸ்பெல்லர்	ரூ. 105 00
சர்க்கரை	
பகிரங்க மார்க்கெட் விலை 100 கி. கி.	ரூ. 360 00
	முதல் ரூ. 361 00

ஜம்மு-காஷ்மீர் விவசாய அமைச்சர் திரிலோசன் தத்தா இம்மாதம் 10-ந்தேதி தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு அமைச்சர் ஆதித்தனாரையும் விவசாய அமைச்சர் அன்பில் தர்மலிங்கத்தையும் சந்தித்த போது எடுத்த படம்.

இந்திய பெண் விரும்பும் லட்சியக் கணவன்

புனா, பிப். 14 — இந்தியாவில் இக்காலத்து இளம் பெண்கள் எப்படிப்பட்ட கணவனை விரும்புகின்றனர் என்பது பற்றி ஒரு சர்வேயில் சுவையான தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது கணவன் படித்தவராக இருக்கவேண்டும்; நல்ல ஆரோக்கியத்துடன் தான் இருக்கவேண்டும்; இனிமையாகப் பழகுபவராக இருக்க வேண்டும் என்று இக்காலத்துப் பெண் விரும்புகிறாள்.

திருமணம் மத சம்பிரதாயப்படி நடைபெறுவதையே அவள் விரும்புகிறாள். ஆனால் ஆடம்பரமில்லாமல் இருக்க வேண்டும் என்பது அவளுடைய விருப்பமாகும்.

இல்லற வாழ்க்கை இனிது நடைபெற கணவன்—மனைவி இடையே அனுசரித்துச் செல்லும் போக்கு, தியாக உணர்வு, சுமுக உறவு ஆகியயவை இருக்க வேண்டும் என்று இச்சர்வேயில் பேட்டி காணப்பட்டவர்கள் கூறினர்.

பெற்றோர் பார்த்து நடத்தி வைத்த திருமணமாயினும் சரி, காதல் திருமணமாயினும் சரி பெற்றோர்களின் ஆசி தேவை என்று அவர்கள் கூறினர்.

பேட்டி காணப்பட்ட பெண்கள் அனைவருமே வரதட்சிணை முறையை எதிர்த்தனர். திருமணத்துக்கு ஜாதி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று கூறினர்.

எனினும் பேட்டி காணப்பட்ட பெண்களில் யாரும் அழகு கவர்ச்சி ஆகியவற்றுக்கு முதலிடம் தரவில்லை.

புனாவில் உள்ள எஸ். என். டி. டி. பெண்கள் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 500 இளம் பெண்களைப் பேட்டி கண்டு நடத்திய சர்வேயில் மேற்படி தகவல்கள் வெளியாகின.

டெல்லியில் பிரிட்டிஷ் தளபதி

டெல்லி, பிப். 14—பிரிட்டிஷ் ராணுவத்தின் பிரதம தளபதி மைக்கல் கார்வர். நேற்று டெல்லிக்கு வந்து சேர்ந்தார்.

டெல்லி விமான நிலையத்தில் மைகல் தம்பதிகளை இந்திய ராணுவத்தின் பிரதம தளபதியும் பிரிட்டிஷ் தூதர் முதலானோர் வரவேற்றார்கள்.

இந்திய ராணுவத் தளங்களைப் பார்வையிட்டபின் இந்திய ராணுவ மந்திரி ஜெகஜீவன்ராமை அவர் சந்தித்துப் பேசினார்.

பூச்சி மருந்து தெளிக்க விவசாயிகள் எதிர்ப்பு: அமைச்சர் தகவல்

சென்னை, பிப். 14—ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் பூச்சி மருந்து தெளிப்பு நிறுத்திவைக்கப் பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தெரிவித்தார்.

நேற்று சட்டசபை கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் அமைச்சரின் பதில்களும் வருமாறு:

கேள்வி:—கே. ஏ. வகாப் (மு. லீக்) 70-71 — 71-72 ஆண்டுகளில் தமிழகத்தில் விமானம், ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து எத்தனை ஏக்கருக்கு தெளிக்கப்பட்டது இதை எதிர்த்து கோரிக்கை வந்துள்ளதா?

அன்பில் தர்மலிங்கம் 70-71-ம் ஆண்டில் நிலக்கடலை, நெல், பருத்தி, உருளைக் கிழங்கு ஆகிய பயிர்களுக்கு 6 லட்சத்து, 9 ஆயிரத்து 76 ஏக்கர்களுக்கும் 71-72ல் 9 லட்சத்து, 8 ஆயிரத்து 30 ஏக்கருக்கும் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது.

தங்களிடம் ஒப்புதல் வாங்கவில்லை. தெரிவிக்கப்படவில்லை என்று விவசாயிகளிடமிருந்து ஆட்சேபங்கள் வந்துள்ளதால் 72—73ம் ஆண்டுக்காக விமானம் ஹெலிகாப்டர் மூலம் பூச்சிமருந்து தெளிக்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வகாப் (மு. லீ) இந்த திட்டத்தால் நன்மை ஏற்பட்டுள்ளதா?

அன்பில் தர்மலிங்கம் அதிக நன்மை ஏற்பட்டுள்ளது. இந்த திட்டம் 1961-62 முதல் 71-72 வரை நடத்தப்பட்டு வந்தது. இதனால் விவசாயிகள் சரியாக பலன் அடைந்திருக்கிறார்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சில நிலச் சொந்தக்காரர்கள் குத்தகைகாரர்களிடம் தான் இதற்கான கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானம் போட்டு அனுப்பி வந்தன. அதை பரிசீலித்து இந்த மருந்து தெளிக்கும் திட்டம் இதுவரை நடைபெற்று வந்தது.

தங்கமணி (வ. கம்யூ):— 10 லட்சம் ஏக்கருக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. ஏக்கருக்கு கட்டணம் எவ்வளவு? இது முன்பிருந்த கட்டணத்தைவிட இப்பொழுது அதிகமா?

அன்பில் தர்மலிங்கம்: ஏக்கருக்கு 8 ரூபாய் முதல் 10 ரூபாய்வரை கொடுக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு விமானக் கம்பெனியினர் சங்கமாக சேர்ந்து, பெட்ரோல் விலை உயர்ந்துவிட்டது. எனவே கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதன்படி ஏக்கருக்கு விமானக் கம்பெனியினருக்கு ரூ. 11 வீதம் அளிக்கப்பட்டது

இளங்கோவன் (தி. மு. க.): விவசாயிகளிடம் இந்த பாக்கியை வசூலிக்க கடுமை காட்டப்படுகிறது — தடுக்கப்படுமா?

அன்பில் தர்மலிங்கம்:— இந்த கட்டண பாக்கி 2 அல்லது 3 ஆண்டுகளாக கொடுக்கப்பட வேண்டியிருந்தால் பரவாயில்லை. 61-ல் இருந்தே நிறைய பாக்கி இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள்; குத்தகைதாரர்களிடம் தான் வசூலிக்க வேண்டும் என்று வழக்கு போட்டிருப்பதால் இது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சுரேந்திரன் (இ. காங்):— இந்த திட்டத்திற்கு மத்திய அரசு மானியம் கொடுக்கிறதா?

அன்பில் தர்மலிங்கம்:—மத்திய அரசு 10 லட்சம் ஏக்கருக்கு அனுமதி வழங்கி இருக்கிறது. ஏக்கருக்கு 7 ரூ. வீதம் மத்திய அரசு அளிக்கிறது. மீதியில் 15 சதவிகிதம் பூச்சி மருந்து முதலியவைகளுக்காக மாநில அரசு உதவி வந்தது. இப்பொழுது இதை மாநில அரசு நிறுத்திவிட்டது. விவசாயிகளிடம் இருந்து 11 ரூபாய் முதல் 13 ரூபாய்வரை வசூலிக்கப்படுகிறது.

வாஞ்சு: கேரளாவின் புதிய கவர்னர்

புதுடெல்லி, பிப். 14— மத்திய அரசின் தொழில் அபிவிருத்தி அமைச்சகத்தின் முன்னாள் காரியதரிசியான என். என். வாஞ்சு, கேரளாவின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்போது வி. விசுவநாதன் கேரள கவர்னராக இருக்கிறார்.

குஜராத் மாநில கவர்னராக ஸ்ரீமன் நாராயணுக்குப் பதில் அம்மாநிலத்துக்கு கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வி. வி. விசுவநாதன் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் புதிய கவர்னர்கள் நியமனம் நேற்று டெல்லியில் அறிவிக்கப்பட்டது.

அஸ்ஸாம், காஷ்மீர் ஆகிய மாநிலங்களுக்கும் புதிய கவர்னர்கள் நியமிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் பிரமுகர் சுட்டுக் கொலை

லக்னோ, பிப். 14—உத்தரப் பிரதேச சட்ட சபையின் முன்னாள் அங்கத்தினரும், பிரபல காங்கிரஸ் தலைவருமான ராஜநாராயண் மிஸ்ரா அவருடைய இல்லத்திலேயே பயங்கரமாக கொலைசெய்யப் பட்டார்.

நான்கு பேர் திடீரென்று அவருடைய இல்லத்தில் புகுந்து அவரைக் காணவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர். மிஸ்ரா வெளியே வந்தபோது, உடனே அந்த நான்கு பேர்களும் அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். மத்திய மந்திரிசபை குழுவின் உறுப்பினர் மிஸ்ரா.

சர்க்கரை ஆலைகள் தேசியமாகுமா? அடுத்த 2 மாதங்களில் முடிவு

லக்னோ, பிப். 14—சர்க்கரை ஆலைகளை தேசியமாக்குவதா என்பது பற்றி மத்திய அரசாங்கம் ஓரிரு மாதங்களில் முடிவு செய்யும்.

சர்க்கரைத் தொழிலை தேசியமாக்குவது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப் பட்ட கமிட்டி வருகிற 28ந் தேதி தனது அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்யுமென்று மத்திய உணவு விவசாய அமைச்சர் பக்ருதீன் அலி அகமது நேற்று லக்னோவில் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த அறிக்கையை விரைவில் ஆராய்ந்து ஓரிரு மாதங்களில் இறுதி முடிவு எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

நிருபர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்குவது மத்திய அரசின் முன் உள்ள பிரதான பிரச்னை அல்ல என்றார்.

இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம் நாடு பூராவுக்கும் ஒரு தீர்வைக்காண விரும்புகிறது. மத்திய அரசாங்கம் முடிவு எடுத்ததும் அது நாடு பூராவிலும் அமுல் படுத்தப்படும் என்றார் பக்ருதீன் அலி அகமது.

உ. பி. மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளைத் தேசியமாக்கும் பிரச்னைபற்றி நிருபர்கள் கேட்டபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

உ. பி. மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளை தேசியமாக்குவது பற்றி மாநில அரசு தயாரித்து அனுப்பிய மசோதா மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளதாகவும் பக்ருதீன் அலி அகமது கூறினார்.

தோல் வியாபாரிகள் பிரச்னை:

சட்டசபையில் அவசர தீர்மானம்

சென்னை, பிப். 13—மத்திய அரசின் தோல் ஏற்றுமதி கொள்கையால் தமிழகத்தில் சிறு தோல் வியாபாரிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை விவாதிக்க லத்தீப் (மு லீக்) ஒரு அவசர தீர்மானம் கொண்டுவந்தார்.

ஒரு லட்சம் பேர் இந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றார்.

அமைச்சர் மாதவன் பதில்: முக்கிய தொழிலான இந்தப் பிரச்னையைப் பற்றி மத்திய அரசு எடுத்த முடிவை தமிழக அரசைக் கலந்து செய்து இருக்கலாம். இது பற்றி முதல்வர் பிரதமரிடம் தெரிவித்து இருக்கிறார்.

இப்போது இந்தப் பிரச்னை ஓரளவு தணிக்கப்பட்டு இருக்கிறது என்றார்.

இந்த அவசர தீர்மானத்திற்கும் அனுமதி மறுக்கப் பட்டது.

புது ரக கோழிக்கு முதலமைச்சர் பெயர்

பெங்களூர், பிப். 14— மைசூர் மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கலப்பினக் கோழிக்குஞ்சுக்கு மைசூர் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

அந்தப் புரதச்சத்து மிகுந்த புது ரக குஞ்சுக்கு "அர்ஸ் கோழி" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

விவசாய பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித்துறை இயக்குனர் டாக்டர் என். வி. ... நேற்று ஒரு விழாவில் அறிவித்தார்.

பெங்களூரிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் ஹெப்பல் என்ற இடத்தில் உள்ள விவசாய பல்கலைக் கழகத்தில் பி. எஸ், ராமப்பா என்ற அதிகாரி இந்தக் கலப்பினக் கோழிக் குஞ்சுவை உருவாக்கினார். நேற்றைய விழாவில் அவரை முதலமைச்சர் அர்ஸ் கவுரவித்தார்.

இந்த புதுரக கோழிக்குஞ்சுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக விழாவில் அறிவிக்கப்பட்டது.

திருவள்ளூர் நகரசபை தலைவர் தேர்தல்

திருவள்ளூர், பிப். 16—திருவள்ளூர் நகராட்சித் தலைவர் தேர்தல் இம் மாதம் 23ந் தேதி நடைபெறும். அதற்கான விசேஷகூட்ட அறி[illegible]யை கோட்டாட்சி தலைவர் [illegible] உறுப்பினர்களுக்கு [illegible]வார்.

நகராட்சித் தலைவராக இருந்த பி. சி. [illegible]ல்வராஜன் ராஜினாமா செய்ததை யடுத்து இந்தத் தேர்தல் நடைபெறுகிறது.

இந்த நகராட்சியில் இப்போது மூன்றாவது தடவையாக தலைவர் தேர்தல் நடைபெறுகிறது. நகரசபைத் தலைவர் ஏ. கோவிந்தசாமி (தி. மு. க.) காலமானதை யடுத்து செல்வராஜன் (தி. மு. க.) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் சமீபத்தில் இவர் பதவியை ராஜினாமா செய்தார்.

நகராட்சியில் கட்சி நில[illegible]: காங்கிரஸ் 7; தி. மு. க. 6; அ. தி. மு. 2; தமிழரசுக் கழகம் 1, மொத்தம் 16 இடங்கள்.

"பிரதமர் இந்திராவை சந்திக்கமாட்டேன்": சுப்பாரெட்டி அறிவிப்பு

கடப்பை, பிப். 14—"என்னுடைய நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை நான் பிரதமர் இந்திராவை சந்திக்கமாட்டேன்" என்று தனி ஆந்திர மாநிலப் போராட்டத் தலைவரான சுப்பா ரெட்டி திட்டவட்டமாக அறிவித்தார்.

டெல்லிக்குப் போய் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிற ஆந்திரத் தலைவர்கள் 3 பேர், தமது சம்மதத்தைப் பெறவில்லை என்றும் சுப்பா ரெட்டி கூறினார்.

நேற்று கடப்பை நகரில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசினார்.

அவர் கூறியதாவது!—

"நான் டெல்லிக்குப் போகப் போவதாக வெளியான செய்திகள் சரியல்ல. நான் டெல்லிக்குப் போக மாட்டேன்.

நான் ஏற்கனவே விதித்துள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை நான், பிரதமர் இந்திராவைக் கூட சந்திக்கமாட்டேன்.

என்னுடன் பேச்சு நடத்த டெல்லியிலுள்ள தலைவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இ[illegible]கிறார்கள். நான் டெல்லி[illegible] வரவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் ஆந்திராவிலிருந்து மத்திய ரிசர்வ் போலீஸ் படையும், ராணுவமும் வாபஸ் பெறப்படவேண்டும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் போலீஸ் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை நடத்தப்படவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் இந்திரா முன் வராவிட்டால், அவரையோ அல்லது ஜனாதிபதியையோ நான் சந்திக்க மாட்டேன்.

முன்னாள் ஆந்திர மந்திரியான பாசி ரெட்டி கிருஷ்ண மூர்த்தி நாயுடு, மூர்த்தி ராஜு ஆகிய மூவரும் டெல்லிக்குப் போய் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட முறையிலேயே இந்தப் பேச்சு வார்த்தையை நடத்தி வருகிறார்கள்.

தனி ஆந்திர மாநில போராட்டக் கமிட்டி தலைவரான என்னிடமிருந்தோ அல்லது கமிட்டியிடமிருந்தோ அவர்கள் இதற்கான அனுமதி எதுவும் பெறவில்லை. ஆனால் அதன் காரணமாக எனக்கும் அவர்களுக்கும் கருத்து வேற்றுமை இருப்பதாக அவசரப்பட்டு கருதிவிடக்கூடாது என்றார் சுப்பா ரெட்டி.

வன்முறையில் ஈடுபடக் கூடாது என்று மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

500 பெண்கள் உண்ணாவிரதம்

சித்தூர், பிப். 14— தனி ஆந்திர மாநிலம் கோரி சித்தூரில் 500-க்கு மேற்பட்ட பெண்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்கள்.

சித்தூர் மாவட்டத்தில் மற்றும் பல ஊர்களில் இது போன்ற உண்ணாவிரதப் போராட்டம் நடக்கிறது.

அனந்தப்பூரில் ரயில் நிறுத்தம்

அனந்தப்பூர் ரெயில் நிலையத்தில் ஏராளமான பெண்கள் உள்பட சுமார் 1,000 பேர் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடத்தினர்கள். நேற்று ஒரு ரெயில் சுமார் 5 மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது.

2-ம் வகுப்பு ரெயில்பெட்டி ஒன்றில் இருக்கைகள எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

குண்டக்கல் டிவிஷனில் எல்லா ரெயில்களும் ரத்து செய்யப்பட்டன.

கத்தியைக் காட்டி மிரட்டி, ரெயில் நிலையத்திற்கு தீவைப்பு

ஒரு ரெயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் புகுந்து உதவி ஸ்டேஷன் மாஸ்டரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, அவரிடமிருந்து சாவிகளைப் பிடுங்கினார்கள். பின்னர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மண்ணெண்ணையை எடுத்து, தஸ்தாவேஜிகள் மீது ஊற்றி தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள குனேரு ரெயில் நிலையத்தில் இந்த சம்பவம் நடந்தது.

நெல்லூர் ரெயில் நிலையத்தில் ரெயில்வே ஊழியர்கள் விரட்டப்பட்டனர். ரெயில் நிலையம் பூட்டப்பட்டது.

சென்னை, விஜயவாடா நகரங்களுக்கிடையே சரக்கு ரயில் போக்குவரத்து ஓரளவு நடைபெற ஆரம்பித்துள்ளது. பிராந்திய ராணுவப் படையினர் இந்த சரக்கு ரயில்களை ஓட்டுகிறார்கள்.

த. நா. இ. காங்கரஸ்

பொதுச் செயலாளராக அனந்தநாயகி

சென்னை, பிப். 14— தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளராக சட்டசபை உறுப்பினர் டி. என். அனந்தநாயகி நியமிக்கப்பட்டிருப்பதாக த. நா. இந்திரா காங்கிரஸ் தலைவர் வி. ராமையா அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, ஏ. கே. சண்முகசுந்தரமும் சுப்பராஜாவும் பொதுச் செயலாளர்களாக இருந்துவருகின்றனர். மூன்றாவது பொதுச் செயலாளராக அனந்தநாயகி நியமிக்கப்பட்டுள்ளார்.

ரஷியாவின் அதிவேக பயணி விமானம்

புதுடெல்லி, பிப். 14—ரஷியா [illegible]யுள்ள அதிவேக சூப்பர் [illegible]னிக் டி. யு—144 பயணி விமானம் இவ்வாண்டில் ரஷியாவின் உள்நாட்டு விமான சர்வீசில் இடம் பெறும் என்று இந்தியாவிலுள்ள ரஷியத் தூதர் என். எம். பெகாவ் கூறினார்.

இந்த ரக விமானம் அடுத்த ஆண்டில் அல்லது 1975-ம் ஆண்டு ஆரம்பத்தில் வெளிநாட்டு ரூட்டுகளிலும் விடப்படும் என்றார் அவர்.

ரஷிய சூப்பர்சானிக் டியு-144 விமானம் ஒலியை மிஞ்சும் வேகத்தில் அதாவது மணிக்கு 1500 மைல் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. இதில் 140 பிரயாணிகள் ஏறிச் செல்லலாம்.

ஒலியை மிஞ்சும் வேகத்தில் பறக்கின்ற போர் விமானங்கள் ஏற்கனவே உள்ளன. எனினும பயணிகள் ஏறிச்செல்லும் இவ்வகை விமானங்கள் இப்போதுதான் அறிமுகப்படுத்தபடுகின்றன.

ஒலியைமிஞ்சும் வேகமுள்ள விமானங்களை வெளிநாடுக்கு விற்கும் திட்டம் இப்போதைக்கு இல்லை என்றும் ரஷிய தூதர் என். எம். பெகாவ் சொன்னார் 1975ம் ஆண்டுக்குப் பிறகு இவை விற்பனை செய்யப்படலாம் என்றார் அவர்.

எகிப்து மந்திரி இந்தியா வருகிறார்

புதுடெல்லி, பிப். 14—எகிப்து நாட்டின் வெளிநாட்டு இலாகா மந்திரி டாக்டர் ஜயாத் மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் இந்தியாவிற்[illegible] வருவார்.

எகிப்திய ஜனாதிபதி டாக்டர் சாதத் அனுப்பியுள்ள கடிதத்தை டெல்லியில் இந்தியப் பிரதமரிடம் அவர் கொடுப்பார். பிரதமர் இந்திரா, வெளிநாட்டு மந்திரி சுவரண்சிங் ஆகியோருடன் அவர் முக்கியப்பேச்சு நடத்துவார்.

திருமணம்

திருப்போரூர், பிப். 14—'தேசபக்தன்' ஆசிரியர் எ. மயிலைநாதன் மகன் செல்வன் அய்யாதுரைக்கும், பண்பாக்கம் பி. குப்புசாமி மகள் செல்வி செல்வநாயகிக்கும் கடந்த பிப். 9-ந் தேதி காலை திருப்போரூர் முருகேச முதலியார் சத்திரத்தில் வெகு சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

பெரியார் ஈ. வெ. ரா., முதலமைச்சர் கருணாநிதி, கோவை அய்யாமுத்து, ம. பொ. சி., ஏ. பி. சி. வீரபாகு, மீ. ப. சோமசுந்தரம் அகிலன் மற்றும் பல தலைவர்களும் எழுத்தாளர்களும் மணமக்களை வாழ்த்திச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

மத்திய சம்பளக் கமிஷன் அறிக்கை: அடுத்த மாதம் தாக்கலாகும்

புதுடெல்லி, பிப். 14—மத்திய அரசு ஊழியர்களுக்கான சம்பளக் கமிஷனின் அறிக்கை மார்ச் மாதம் 31-ந் தேதிக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டு விடும் என்று மத்திய நிதி அமைச்சர் சவான் உறுதி கூறியுள்ளார்.

மத்திய அரசாங்க ஊழியர் பிரதிநிதிகளிடம் மந்திரி சவான் இந்த உறுதி மொழியை அளித்தார்.

மத்திய அரசாங்க ஊழியர்கள் பெடரேஷனின் துணைத் தலைவர் மதுசூதன், அகில இந்திய பாதுகாப்பு சிப்பந்திகள் பெடரேஷனின் தலைவர் எஸ். எம். பானர்ஜி ஆகியோர் தலைமையில் பிரதிநிதிக் குழுவினர் நேற்று மந்திரி சவானை சந்தித்துப் பேசினர்.

சம்பளக் கமிஷன் தனது அறிக்கையை மார்ச் 31-ந் தேதிக்குள் தாக்கல் செய்வது சந்தேகம் என்பதால் இடைக்கால சம்பள உயர்வு அளிக்க வேண்டும் என்று அவர்கள் சவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

சவான் பதிலளிக்கையில் "சம்பளக் கமிஷனின் அறிக்கை விரைவில் வந்துவிடும், எப்படியும் மார்ச் 31-ந் தேதிக்குள் தாக்கல் செய்யப்பட்டு விடும்" என்று உறுதிகூறினார்.

ஒருவேளை சம்பளக் கமிஷனின் அறிக்கை மார்ச் [illegible]க்குள் வராது போனால் மத்திய அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் மார்ச் 31ந் தேதி தன்னை வந்து சந்திக்கலாம் என்றும் சவான் கூறினார்.

போராட்டம் தள்ளிவைப்பு

சவான் கூறிய உறுதிமொழியைத் தொடர்ந்து மத்திய அரசு ஊழியர்கள் தற்போது தாங்கள் நடத்திவரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை வாபஸ் பெறுவது என்றும் அடுத்து மேற்கொள்ள இருந்த காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஏப்ரல் 2-ந் தேதிவரை தள்ளிப்போடுவது என்றும் முடிவு செய்துள்ளனர்.

பானர்ஜி கோரிக்கை

பார்லிமெண்டின் கூட்டத் தொடர் துவங்கும் தினத்தன்றே சம்பளக் கமிஷன் பற்றி அரசாங்கம் அறிக்கை வெளியிட வேண்டுமென பார்லிமெண்ட் மெம்பர்கள் வற்புறுத்த வேண்டும் என்று அகில இந்திய பாதுகாப்பு சிப்பந்திகள் சங்கத் தலைவரான எஸ். எம். பானர்ஜி கோரியுள்ளார்.

இந்த விஷயத்தில் பிரதமரும், நிதி மந்திரியும் உடனே தலையிடவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

நீர் மட்டம்

சென்னை, பிப். 14—

மேட்டூர்	25.54	மீட்டர்
பெரியாறு	5.82	,,
வைகை	16 58	,,
பாபநாசம்	27 40	,,
கிருஷ்ணகிரி	15.24	,,
சாத்தனூர்	35.00	,,
மணிமுத்தார்	27.25	,,
பேச்சிபாறை	7.44	,,
பெரிஞ்சாணி	8 49	,,

நியூயார்க் பருத்தி மார்க்கெட்

நியூயார்க், பிப் 13—

ஆரம்ப விலை	39-20
முடிவு விலை	39-05

சென்னை ராயபுரம் கடற்கரையில்

மீனவர்கள் தாககப்பட்டது உண்மையல்ல: அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 14—ராயபுரம் கடற்கரையில் மீன் பிடித்து வந்த மீனவர்கள் 7-2-73 அன்று தாக்கப்பட்டது குறித்து மருதாசலம் (கம்யூ) ஒரு அவசர தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த அவசர தீர்மானத்திற்கு அமைச்சர் சத்தியவாணி முத்து பதில் அளித்தார்.

7-ம் தேதி அன்று மீனவர் தாக்கப்பட்டார்கள் என்றும் அரிஜன பெண் மானபங்கப்படுத்தப்பட்டார் என்பதும் உண்மையல்ல.

மீன் விற்பதில் மீனவர்களுக்குள் சமூகக் கட்டுப்பாடு இருந்து வருகிறது. இது போன்ற பிரச்சினைகள் வந்தால் அதைத் தீர்க்க குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குழு பிரச்னைகளை தீர்த்துவைத்து வருகிறது இப்போதும் குழுக்களிடம் பேசி வருகிறார்கள் என்றார்.

அமைச்சரின் பதிலுக்குப் பிறகு இந்த அவசர தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பதாக துணை சபாநாயகர் அறிவித்தார்.

ருமேனியாவிற்கு இரும்பு ஏற்றுமதி

புது[illegible]லி, பிப். 14—ருமேனிய நாட்டிற்கு அடுத்த ஆண்டில் 20 லட்சம் டன் இரும்பை இந்தியாவின் உலோக வர்த்தக கார்ப்பரேஷன் ஏற்றுமதி செய்யும். அடுத்த பத்தாண்டிற்குள் ருமேனியாவிற்கு இந்தியா 20 கோடியே 20 லட்சம் டன் இரும்பினை ஏற்றுமதிசெய்யும் நேற்று புதுடெல்லியில் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி இந்த ஏற்றுமதி நடக்கும்.

ஜப்பானிற்கு அடுத்தபடியாக ருமேனியாதான் இந்தியாவிடமிருந்துமிக அதிக அளவில் இரும்புக் கனிகளை வாங்குகிறது.

ஜனாதிபதி சென்னை வருகிறார்

சென்னை, பிப். 14— ஜனாதிபதி கிரி விசேஷ விமானப் படை விமான மூலம் நாளைய வியாழக்கிழமை சென்னை வந்து சேருவார்.

சென்னையில் 3 நாட்கள் தங்கியிருக்கப் போகும் ஜனாதிபதி கிரி நாளைய தினம் ராஜாஜியின் நினைவு மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டுவார்

நாளை மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கும் இந்த விழாவுக்கு கவர்னர் கே. கே. ஷா தலைமை வகிப்பார். தமிழக முதல்வர் கருணாநிதி இந்த விழாவில் கலந்து கொள்வார்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான "பத்துப் பாட்டு" நூலை ஸ்ரீ[illegible]ம் த சிதன் சமஸ்கிருத[illegible] மொழி பெயர்த்துள்ளார்.

ஜனாதிபதி கிரி வெள்ளிக்கிழமை[illegible] இந்நூலின் முதல் பிரதியை வெளியிடுவார் தவிர, ஜனாதிபதி கிரி சென்னையில் மருத்துவ வரலாற்றுக் கண் காட்சியைத் துவக்கி[illegible] வைத்து இந்திய வைத்திய வரலாற்றுச் சங்க வெள்ளி விழாவில் கலந்து கொள்[illegible]ர்.

சனிக்கிழமையன்று அவர் கிண்டி என்ஜினீரிங் கல்லூரியில் என்ஜினியர்கள் கழக மாநாட்டைத் துவக்கிவைப்பார்.

[illegible]ங்களாவுக்கு குடிபோக மறுத்த மந்திரி

புதுடெல்லி, பிப். 14—புதிய மந்திரிகளில் ஒருவரான போலா பாஸ்வான் சாஸ்திரி, மந்திரிக்கு உரிய பங்களா ஒன்றுக்கு குடிக்கனச்செல்ல மறுத்துவிட்டார்.

மத்திய அரசாங்க குடி[illegible]ப்பு இலாகா மந்திரியாக சில தினங்களுக்கு முன்பு பதவி ஏற்ற அவர், [illegible] டெல்லியின் முக்கியப் [illegible]தி ஒன்றில் ஒரே ஒரு அறையில் தங்கியிருக்கிறார்.

மற்ற புதிய மந்திரிகள் அனைவருக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து முடிக்கப்படும்வரை, தாம் தற்போதைய அறையிலேயே தங்கியிருக்க மந்திரி போலா பாஸ்வான் சாஸ்திரி விருப்பம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

டாலர் மதிப்புக் குறைப்பின் விளைவாக

அமெரிகாவுக்கு இந்திய ஏற்றுமதி பாதிக்கப்படலாம்

நியூயார்க், பிப். 14—அமெரிக்கா தனது டாலரின் மதிப்பைக் குறைத்துக் கொண்டதன் விளைவுகளில் ஒன்றாக, அமெரிக்காவுக்கு இந்திய ஏற்றுமதி பாதிக்கப்படலாம் என்று இங்கு பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

எனினும் டாலர் மதிப்புக் குறைப்பின் முழு விளைவுகள் இனிமேல்தான தெரியவர வேண்டும்.

டாலர்மதிப்புக்குறைப்பின் உடனடி விளைவாக வெளிநாடுகளிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகள் அந்நாட்டில் அதிகரிக்கும். அதே நேரத்தில் அமெரிக்கப் பொருட்களை வெளிநாட்டவர் [illegible]னை விடக் குறைந்த வி[illegible]யில் வாங்க முடியும்.

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் கணிசமான பகுதி அமெரிக்காவுக்குச் செல்கிறது.

கடந்த ஆண்டில் இ[illegible]யா சுமார் ரூ 300 கோடி மதிப்புள்ள பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்தது. இவற்றில் சணல் தயாரிப்புகள், தேயிலை; முந்திரி, சர்க்கரை, ஜவுளி, வாசனைப் பொருட்கள், தோல் ஆகியவை பிரதான பொருட்களாகும்.

டாலர் மதிப்புக் குறைப்பின் விளைவாக அமெரிக்காவில் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உயரும் என்பதால் இந்தியா போன்ற முன்னேறும் நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு [illegible] பெறும் ஏற்றுமதி [illegible]க்கப்படலாம்.

எனினும் ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுடனான வர்த்தகப் பாக்கியைப் போக்கிக் கொள்வதே டாலர் மதிப்புக் குறைப்பின் பிரதானநோக்கமாகும். இந் நாடுகளிலிருந்து கார், டெலிவிஷன் பெட்டி, டிரான்சிஸ்டர், ரேடியோ, மின்னணுக் கருவிகள் ஆகியவற்றின இறக்குமதியைக் குறைத்து தனது ஏற்றுமதியை அதிகரிக்க அமெரிக்கா விரும்புகிறது.

டாலர் மதிப்புக் குறைப்பு எதிர்பார்த்த பலனை அளிக்காவிட்டால் குறிப்பிட்ட இறக்குமதிப் பொருட்களின் மீது விசேஷ சர்சார்ஜ் விதிக்கவும் அமெரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

திரை உலகம்

தாயகம் பிக்சர்சாரின் 'வள்ளி தெய்வானை' படத்தில் ரவிச்சந்திரன்' எஸ். வி. ராமதாஸ்.

4-ம் பத்தித் தொடர்ச்சி

பரமாத்மாவாக சிவகுமாரும் பாமாவாக ஜெயலலிதாவும் நாரதராக டி. ஆர். மகாலிங்கமும் ருக்மணியாக வித்யாவும் நடிக்கனர்.

ஸ்ரீனிவாசன் அண்டு கம்பெனியாரின் 'கிருஷ்ணலீலா' படத்திற்கான இந்தக் காட்சி விஜயா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

படத்தை ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்கிறார்.

ஜெயாவை மணக்க ராமதாசுக்கு ஆசை

ராமலிங்கர் ரூ. 2 ஆயிரம் கடன் வாங்கியிருந்தார். மைனர் நாகரத்தினத்திடம். நாகரத்தினம் பெயருக்கேற்றபடி நாகமாக இருக்கிறான்—ரத்தினமாக இல்லை. எப்படியாவது அவன் சீதாவைத் தீண்டிவிடவேண்டும்—அடைந்து விடவேண்டும் என்று திட்டமிட்டான் நாகரத்தினம் தான் கொடுத்த கடனை சாண்பித்து சீதாவைப் பெண் கேட்டு தாம்பூலத் தட்டோடு ராமலிங்கத்தின் வீட்டிற்கு வருகிறான்.

பணத்திற்காகத் தன் அண்ணன் மகளின் வாழ்வைப் பலியிட ராமலிங்கம் விரும்பவில்லை.

இரண்டாம் தாரமாகக் கொடுப்பதா என்றுதான் அவர் வேதனைப்பட்டார்.

சம்பந்தம் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் சீதாவை காப்பாற்றுவதற்கென்றுதானோ என்னவோ ஒரு இன்சூர் பார்சல் வருகிறது. அதில் ரூ. 2 ஆயிரம் பணம் வருகிறது.

பணத்தைப் பார்த்ததும் நாகரத்தினத்திற்கு திகைப்பு. ராமலிங்கத்திற்கும் சீதாவிற்கும் மகிழ்ச்சி.

ராமலிங்கம் மைனர் நாகரத்தினத்திடம் உடனடியாக பணத்தைக் கொடுத்து கடனை அடைத்து அனுப்புகிறார்.

வெளியூரிலிருந்து சீதாவின் அண்ணன் ராமு அனுப்பிய பணம் சரியான சமயத்திற்கு வந்து அவளைக் காப்பாற்றுகிறது.

இக்காட்சி கௌரி ஆர்ட் எண்டர்பிரைசின் அனுபத் தங்கை படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

ராமலிங்கமாக சுந்தர்ராஜனும், நாகரத்தினமாக ராமதாசும் சீதாவாக ஜெயாவும், ராமுவாக முத்துராமனும் நடிக்கின்றனர்.

திரைக்கதை வசனத்தை குகநாதன் எழுதியுள்ளார். கண்ணதாசன் பாடல்களுக்கு எம். எஸ். வி. மகாதேவன் இசை அமைக்கிறார்.

'திருமலைத் தெய்வம்' படத்தில் ஏவி. எம். ராஜன், ஸ்ரீவித்யா.

கணவனிடம் ஜெயலலிதா சண்டை

கிருஷ்ணபரமாத்மா தனது இரு பத்தினிகளில் ஒருவரான ருக்மணியோடு இருக்கும் போது நாரதர் அபூர்வம் வாய்ந்த பாரிஜாத மலர் ஒன்றைக் கொண்டு வருகிறார்.

நாரதர் வற்புறுத்திக் கூறியதின் பேரில் அம்மலரை வாங்கி ருக்மணிதேவியின் கார் குழலில் சூட்டினார்.

நாரதரோ கிருஷ்ண பரமாத்மாவுக்குத் தெரியாமல் பாமாவிடம் ஓடி வந்தார். பாமாவை விட ருக்மணியைத்தான் கிருஷ்ண பரமாத்மா உயர்வாக மதிக்கிறார். அதனால்தான் அரிய மலரான பாரிஜாத மலரையும் ருக்மணியின் கூந்தலுக்கு அர்ப்பணம் செய்து விட்டார் என்று தூபம் போட்டு உடனடி மறைந்து விடுகிறார். இதனால் கலகம் உருவாகியது.

கிருஷ்ண பரமாத்மா பாமாவைத் தேடி அரண்மனைக்கு வர அறையின் கதவுகளை அடைத்து அவரை வெளியே நிறுத்தி வைத்து கோபத்தை காட்டுகிறார் பாமா.

கதவைத் திறக்கும்படி மன்றாடிய கிருஷ்ண பரமாத்மா பாமாவின் பிடிவாதம் தளர பாட ஆரம்பிக்கிறார்.

சதய பாமா
கதவைத் திறவாய்
காமி சத்யபாமா
கதவைத் திறவாய்
தாபத்தை செய்தால்
இனி தாமேன
மன மோகினி
தயை புரிவாய் நீ கண்மணி
ஜல மயல்லாய
அறிந்த மாயன்
என்னிடம்
இந்த சாகஸம்
ஏனோ சொல்லடி

என்று கிருஷ்ண பரமாத்மா பாடிய உருக்கமான பாடல் கேட்டு சினத்தை ஒருவாறு அடக்கிக் கொண்ட பாமா பாரிஜாத மலரைப் பற்றிய பிரச்னையை எழுப்பினார்.

நாரதரின் விஷமத்தை உணர்ந்த கிருஷ்ணன் உண்மையை சொல்லி நழுவ வழி தேடினார்.

"என்னை விட அந்த ருக்மணி உயர்ந்தவளா? அவளுக்கு பாரிஜாத மலர் என்றால் எனக்கு அந்த பாரிஜாத மரமே வேண்டும். கொண்டு வாருங்கள். அப்போதுதான் என கௌரவம் காக்கப்படும்" என்று கோபத்தோடு கூறுகிறாள் பாமா.

"பாரிஜாத மலர் கிடைத்ததே அரிது. பாரிஜாத மரமே வேண்டும் என்றால் அதற்கு நான் எங்கே போவேன் பாமா" என்று கிருஷ்ண பரமாத்மா தடுமாற்றம் கொள்கிறார்.

"ஆகா, அழகாக பொய் சொல்ல உங்களிடம்தான் கற்றுக் கொள்ளவேண்டும். சிறு பிராயத்தில் தயிர், வெண்ணை திருடிய போதெல்லாம் பக்குவமாக பொய் சொல்லி உங்களுக்கு எப்பவும் பொய் சொல்லுவதே கை வந்த கலையாகப் போய்விட்டது. ஆனால் இந்த பாமாவிடம் அந்த ஆயர்பாடி வித்தை ஒன்றும் பலிக்காது. அந்த நாளில் ஒரு பிடி மண்ணை வாயில் போட்டு உலகத்தையே அதில் காட்டிய மாயமாயாவியாயிற்றே நீங்கள். உங்களால் தானு ஒரு பாரிஜாத மரத்தை கொண்டு வர முடியாது. என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. உண்மையில் ருக்மணியைக் காட்டிலும் உங்களுக்கு நான் உயர்ந்தவளாகப்பட்டால் பாரிஜாத மரம் வந்தே தீர வேண்டும். இல்லை, இங்கிருந்து நீங்கள் போய்விட வேண்டும்" என்று கூறி கிருஷ்ணபரமாத்மாவுக்கு வாயிலுக்குப் போகும் வழியைக் காட்டி முகத்தையும் திருப்பிக்கொள்கிறார் பாமா. இக்காட்சியில் கிருஷ்ண

(1-ம் பக்தி பார்க்க)

சிவகுமாரை மணக்க லட்சுமி முடிவு

அழகில் சிறந்த வேதவதி எல்ற அணங்கு மணந்தால் ராமனையே மணப்பது என்று முடிவு செய்கிறாள். தன்னுடைய ஆவலை நிறைவேற்றிக் கொள்வதற்காக தவமும் செய்தாள்.

ராமன் அவள்முன்தோன்றி 'ஏகபத்தினி விரதம் ஏற்ற தன்னால் அவளை மணக்க இயலாது என்றும், அடுத்த அவதாரத்தில் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் கூறுகிறார்.

ராமனின் வாக்கு நிறைவேறும் வகையில் அந்த வேதவதி மறு ஜென்மத்தில் தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் ஆகாசராஜனுக்கு மகளாகப் பத்மாவதி என்ற பெயரில் பிறக்கிறாள்.

"உங்கள் போட்டியால் உருமான திருமலையான ஏழுமலையில் எப்படியும் நாராயணமூர்த்தியைக் கொண்டு வந்துநிறுத்தி திருமலை தெய்வமாக கலியுகம் காக்கும்கடவுளாக பெருமாளாகவீற்றிருக்கழை செய்கிறேன். உங்கள் போட்டியும் ஒரு புனிதமான காரணத்திற்காகத் தான் நடந்திருக்கிறது" என்று ஆதிசேஷனிடமும், வாயு தேவனிடமும் கூறினார் நாரதர்.

நாரதர் முன்னால் மகாலட்சுமி தோன்றி வேதவல்லியான பத்மாவதியின் விருப்பம் நிறைவேற எப்படியாவது நாராயணமூர்த்தியான என் நாயகனை அவர் வாக்கு பலிக்கும் வகையில் என்னிடம் இருந்து பிரித்தே தீர வேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறார்.

"தாயே! பிரிப்பதும் திரிப்பதும் எனக்கு கைவந்த கலையாயிற்றே! கவலைப்படாதீர்கள். நீங்கள் சொன்னபடியே நிறைவேற்றி வருகிறேன்" என்று ஆனந்தப் பட்டார்.

இக்காட்சி சாந்தி கம்பைன்சாரின் 'திருமலை தெய்வம்' வண்ணப்படத்திற்காக ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்தார்.

நாரதராக ஏவி. எம். ராஜனும், மகாலட்சுமியாக ஸ்ரீவித்யாவும், பத்மா வழியாக லட்சுமியும், வெங்கடேச பெருமாளாக சிவகுமாரும் நடித்தனர்.

சந்திரகாந்தா நடிக்கும் "மருமகள் வந்தாள்"

நவநீதா பிலிம்சார் 'மருமகள் வந்தாள்' எனும் பெயரில் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறார்கள்.

படப்பிடிப்பு தொடக்க விழா ஏவி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் நடந்தது. ஜெய் சங்கர், ராஜன், முத்துராமன், நிர்மலா, ஸ்ரீவரலட்சுமி ஆகியோர் நடிக்கிறார்கள் முக்கிய வேடத்தில் சந்திரகாந்தா நடிக்கிறார்.

ஏ. எல். நாராயணன் வசனம் எழுத சங்கர் கணேஷ் இசை அமைக்கிறார் ஏவி. எம். மில் எடிட்டிங் செய்து வந்த விட்டல் இந்தப் படத்தை முதன் முறையாக டைரக்ட் செய்கிறார்.

வசந்த்பிக்சர்ஸ் பட்டிக்காட்டு பொன்னையா வண்ணப் படத்தில் எம். ஜி. ஆர். ஜெயலலிதா.

புதுப் பணக்காரி அம்முகுட்டி

புதுப்பணக்காரி ஆகிவிட்ட அம்முகுட்டி புஷ்பமாலா தனது புதிய பங்களாவில் புது மனை புகுவிழா நடத்த ஏற்பாடு செய்தார், தனக்கு உணவளித்து காப்பாற்றிய சகோதரிக்குகூட அழைப்பிதழை காரில் இருந்து கொண்டே கொடுத்தார். பணத்திமிரை பிரதிபலிக்கும் அவருடைய மிடுக்கான நடிப்பு சிவாஜி பிலிம்ஸ் 'தங்கப்பதக்கம்' படத்திற்காக படமாக்கப்பட்டது.

Printed by S. V. G. Sowrirajulu at the M.C.P. P.S. Press, No. 4, South Bank Road, Madras-28, and Published by him for the Madras Co-operative Printing and Publishing Society Ltd.

Chief Editor: S. V. G. Sowrirajulu. Honorary Editor: N. Muthukumarasamy.